2. தகவல் கோரல்

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி ஆங்கிலத் தொலைக்காட்சி செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு இதே அவையில் நான் எழுப்பிய பிரச்சினையையொட்டி இன்றும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த மூன்று நாட்களாக . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நேற்றைக்கு நான் முடிவாக தீர்ப்பை (குறுக்கீடு) சொல்லிவிட்டேன். திரும்பவும் அதைப்பற்றி பேசவேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள். நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரையும், துணைத் தலைவரையும் பேச அனுமதிப்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், ஏற்கெனவே நான் ஒரு தீர்ப்பு வழங்கி, நேற்றைய பிரச்சினை முடிவுற்றது. என்னுடைய தீர்ப்பின் மேலே மேற்கொண்டு நீங்கள் பேசவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)* Review petition*–க்கும் தீர்ப்பு அதேதான். தீர்ப்பு மாறவில்லை. (குறுக்கீடு) வேறு பொருள் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, எதிர்க்கட்சித் தலைவருக்கு (குறுக்கீடு) ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவருக்கு (குறுக்கீடு) முதலில் நீங்கள் உட்காருங்கள். நானும் எதிர்க்கட்சித் தலைவரும் பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் ஏன் குறுக்கே பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. நிறைய நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். நீங்கள் வேறு பொருள் குறித்து பேசுங்கள். நான் ஏற்கெனவே ஒரு தீர்ப்பை வழங்கி விட்டேன். ஏற்கெனவே வழங்கிய தீர்ப்பில் நீங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது முறையல்ல. அது சரியாக வராது. (குறுக்கீடு) நீங்கள் அதை விட்டுவிட்டு வேறு பேசுங்கள். நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அதைப்பற்றி பேசக்கூடாது, அது நீதிமன்றத்தில் இருக்கிறதென்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, சட்டமன்றப் பேரவை விதி 92 (i)-ன்கீழ் "நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கக்கூடிய வழக்கில் கருத்து சொல்லக்கூடாது" என்றுதான் இருக்கிறது. எனவே, நீதிமன்றம் வழங்கிய அந்த அடிப்படையில் கருத்து சொல்லக்கூடாது. நான் அதற்குள்ளே செல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, 16 ஆம் தேதிதான் நீதிமன்றத்தில் நாங்கள் போட்டிருக்கிற வழக்கே வரப்போகிறது. அது எடுத்துக்கொள்ளப்பெற இருக்கிறதா, இல்லையா என்பது பற்றி 16 ஆம் தேதிதான் தெரியவிருக்கிறது. நாங்கள் போட்டது ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கக்கூடிய, உயர் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கு என்பது "இங்கு நடந்த வாக்கெடுப்பு தவறாக நடந்திருக்கிறது, அதை இரத்து செய்யவேண்டும்" என்ற அடிப்படையில்தான் நாங்கள் வழக்கு போட்டிருக்கிறோம். ஆனால், நாங்கள் இங்கே பேச இருப்பது இந்த சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களைப் பற்றி கடந்த மூன்று நாட்களாக ஓர் ஆங்கில தொலைக்காட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதையெல்லாம் விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் சொன்ன விஷயங்களை எல்லாம் நான் புரிந்துகொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் என்ன பேச வருகிறீர்கள் என்பது எனக்கும் புரிகிறது. (குறுக்கீடு) அது வேண்டாம். விதிமுறைகளில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

அமைதியாக இருங்கள். என்ன? ஆஸ்டின் ஏன் தேவையில்லாததைப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) அமைதியாகத்தான் இருக்கச் சொல்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, என்ன சொல்லுங்கள்?

திரு. கரி. இராமசாமி: நேற்று இந்தச் சபையிலே எழுப்பிய பிரச்சினையை மீண்டும் எழுப்புவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்காததால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளியேறினார்.)